தாக்கப்பட்டது என்பது சாதாரணத் தாக்குதலாக இருந்தால்கூட வேண்டாமென்று விட்டிருக்கலாம். இது அவ்வளவு கடுமையாக இருக்கிறது. சரியான இரண்டு மூன்று பேர் கூடி அவர்களை நெஞ்சிலே ஏறி உதைத்திருக்கிறார்கள் என்கிற பொழுது அவர்களுக்கு எந்த அளவிற்குப் பாதிப்பு இருந்திருக்கும் என்பதையும் எண்ணிப்பார்த்து, இது சம்பந்தமான புகாரைக் காவல் துறைக்குக் கொடுத்து, உரிய நடவடிக்கை எடுப்பதற்குப் பேரவையின் ஒப்புதலைக் கோருகிறேன். பேரவையினுடைய ஒப்புதலோடுதான் நான் இந்தச் செயலைச் செய்ய வேண்டுமென்று கருதுகிறேன். உங்களுடைய ஒப்புதலைத் தரக் கேட்டுக் கொள்கிறேன். (ஆம்) (மேசையைத் தட்டும் ஒலி) பேரவை ஒப்புதலளித்து இருக்கிறது. எனவே பேரவையின் ஒப்புதலோடு இந்த மூவர் மீதும் இந்த எட்டுக் காவலர்கள், இந்த 8 பேர் கடுமையாகத் தாக்குதலுக்கு ஆளாகியிருப்பவர்கள் உள்பட, இந்த 8 பேர் தாக்கப்பட்ட சம்பவம் பற்றிய புகாரை உரிய நடவடிக்கைக்காகப் பேரவையின் ஒப்புதலோடு அனுப்பி வைக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. கவன ஈர்ப்பு

பேரூர் தொகுதியிலுள்ள சி.பி.எம். கல்லூரி ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்காதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு.

திரு. கே.பி. ராஜ் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. கே.பி. ராஜ்.

திரு. கே.பி. ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''பேரூர் தொகுதியிலுள்ள சி.பி.எம். கல்லூரி ஆசிரியர் மற்றும் அலுவலர்களுக்கு நான்கு மாத சம்பளம் மற்றும் பொங்கல் பரிசுத் தொகை கொடுக்கப்படாதது குறித்து'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

அறிக்கை

கோயம்புத்தூர் சி. பி. எம். கல்லூரியைச் சார்ந்த ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்கள் 19–10–92 முதல் வருகைப் பதிவேட்டில் கையெழுத்திட்டு விட்டு,

வேலை செய்யாமல் உள்ளிருப்பு வேலை நிறுத்தத்தில் ஈடு பட்டு வருவதாக கல்லூரி செயலாளர், கோவை மண்டல கல்லூரிக் கல்வி துணை இயக்குநர் அவர்களது கவனத்திற்கு 17–11–1992 அன்று கொண்டு வந்தார்.

2. அக்டோபர் மற்றும் நவம்பர் 92 மாத சம்பள பட்டியல்களுக்கு மான்ய அனுமதி வழங்கும்போது, கோவை மண்டல கல்லூரிக் கல்வி துணை இயக்குநர் கல்லூரி பணி யாளர்கள், வருகைப் பதிவேட்டில் கையெழுத்திட்டு விட்டு, எவ்வளவு நாட்கள் பணிபுரியாமல் இருந்துள்ளனர் என்ற விபரமும், இந்நாட்கள் எவ்வாறு வரன்முறைப்படுத்தப்பட்டது என்ற விபரமும் அளிக்க வேண்டும் என்று கோரியிருந்தார்.

3. கல்லூரி பணியாளர்கள் 23–12–1992 முதல் மீண்டும் பணியாற்றி வருவதாகவும் அவர்கள் வருகைப் பதிவேட்டில் கையெழுத்திட்டு விட்டு வராத நாட்களுக்கு சம்பளம் கோர இயலாது எனவும் கல்லூரி செயலாளர், கல்லூரிக் கல்வி துணை இயக்குநர் அவர்களுக்கு 11–1–1993 அன்று தெரி வித்தார்.

4. கோவை மண்டல கல்லூரிக் கல்வி துணை இயக்குநர் 21–1–1993 அன்று வருகைப் பதிவேட்டில் கையெழுத்திட்டு விட்டு பணிக்கு வராதவர்களது முழுவிபரமும் மற்றும் பணிக்கு வராத நாட்கள் பற்றிய விபரமும் ஆகியவற்றை அளிக்கு மாறு கல்லூரிக்கு தெரிவித்தார். இதற்கான பதில் கல்லூரி செயலாளரிடமிருந்து பெறப்படவில்லை. மேலும் டிசம்பர் 1992, ஜனவரி 1993, பிப்ரவரி 1993 மற்றும் மார்ச்சு 1993 மாதங்களுக்குரிய சம்பள பட்டியல்கள், உரிய மான்ய அனுமதிக் காக இதுநாள் வரை கல்லூரியால் அனுப்பப்படவில்லை. இச்சூழ்நிலையில் இம்மாதங்களுக்கு உரிய சம்பள மான்ய அனுமதி வழங்கப்படவில்லை.

5. மேலும், போனஸ் பட்டியல் மான்ய அனுமதி வேண்டப் பட்டு 23–3–1993 அன்று தான் கோவை மண்டல கல்லூரிக் கல்வி துணை இயக்குநர் அவர்களுக்கு வரப்பெற்றது. அப் பட்டியலுக்கு மான்ய அனுமதி வழங்கினால், 31–3–1993 அன்று நிதியாண்டு முடிவதற்குள் காசாக்கி வழங்கப்பட முடியாது என்பதால், மான்ய அனுமதி வழங்கப்படவில்லை.

6. இதனிடையில் மாவட்ட வருவாய் அதிகாரிகளுடன் நடத்திய பேச்சு வார்த்தையின் போது ஏற்பட்ட உடன் படிக்கையின்படி, விடுமுறை நாட்களில் பணியாற்றி, கல்லூரி கடைசி வேலைநாளான 16–4–1993-க்குள் ஈடு செய்து விடுவதாக ஆசிரியர்கள் சார்பில் தெரிவிக்கப்பட்டது. ஆசிரிய ரல்லாத பணியாளர்கள் கோடை விடுமுறையின் போது பணியாற்றி, ஈடுசெய்து விடுவதாக தெரிவித்துள்ளனர். கோவை மண்டல கல்லூரிக் கல்வி துணை இயக்குநர், கல்லூரி செயலாளருக்கு தொலைபேசி மூலமும், மேற்குறித்த பேச்சு

வார்த்தையின்போதும் கல்லூரி பணியாளர்களுக்கு மேற்படி மாதங்களில் பணி செய்த நாட்களுக்கு உரிய சம்பளத்தை உடன் கோரி பெற்று பணியாளர்களுக்கு வழங்க வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார். ஆனால், கல்லூரி செயலாளர் இம் மாதங்களுக்கான சம்பளப் பட்டியலை இதுவரை கல்லூரிக் கல்வி துணை இயக்குநருக்கு அனுப்பவில்லை.

7. ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்கள் முழு ஊதியமும் வழங்கப்பட வேண்டும் என்ற நிலையில் இருப்ப தாக தெரிய வருகிறது. மேலும், செயலர் கேட்டுக் கொண்டபடி பட்டியலை திருத்தி அனுப்ப, ஆசிரியரல்லாத பணியாளர்கள் மறுப்பதாக தெரிகிறது. தேவையானால், செயலர் அவர்களே பட்டியலை மாற்றி அனுப்பட்டும் என்றும் பிடி வாதமாக இருக்கின்றனர். ஆனால், ஆசிரியரல்லாத பணி யாளர்களால் தயாரித்து அனுப்பப்பட்ட டிசம்பர் 1992 திங்களுக்கான பட்டியலை பிடித்தம் ஏதுமின்றி அப்படியே அனுப்புவதாகவும், தேவையானால், விதிப்படி கல்லூரிக் கல்வி துணை இயக்குநரே திரும்ப அனுப்புமாறும் செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார். செயலாளர், ஊதியம் தர மறுப்ப தாகவும், காலம் கடத்துவதாகவும் கூறி, கல்லூரிக் கல்வி துணை இயக்குநரே நேரடியாக ஊதியம் வழங்க வேண்டும் என்றும், விதிக்கு மாறாக பணியாளர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

8. இந்நிலையில், உள்ளிருப்பு வேலை நிறுத்தத்தில் ஈடு பட்ட காலத்திற்கு ஊதியம் வழங்குவது இயலாத நிலை உள்ளது. இக்காலத்திற்கு விடுமுறை நாட்களில் பணியாற்றி, ஈடு செய்தவுடன் ஊதியம் வழங்கப்படும். பணி செய்த நாட்களுக்கு, சம்பள பட்டியல் கல்லூரி பணியாளர்கள் தயா ரித்து அனுப்பினால், கோவை மண்டல கல்லூரிக் கல்வி துணை இயக்குநரால் மான்ய அனுமதி வழங்கப்படும். 1993—94-ம் நிதியாண்டு துவங்கிவிட்டபடியால், போனஸ் பட்டியல் கோவை மண்டல கல்லூரிக் கல்வி துணை இயக்குநர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டவுடன் மான்ய அனுமதி வழங்கப்படும்.

முற்பகல் 11-45

திரு. கே.பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். கோவை பேரூர் தொகுதியில் உள்ள சி.பி.எம். கல்லூரி தனியாருடைய கல்லூரி. அந்தக் கல்லூரியில் வேலை செய் கின்ற ஆசிரியர்கள், பணியாளர்கள் அத்தனை பேருக்கும 4 மாதங்களாகச் சம்பளம் தரப்படவில்லை. ஏன் என்று கேட்டால், அந்தத் தனியாருடைய கல்லூரிக்குச் சொந்தக் காரர், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர். தனியார் கல்லூரிக்குச் சொந்தக்காரர். அங்கே வேலை செய்கிற ஆசிரியர்களுக்கு அரசாங்கம் கொடுக்கிற சம்பளத்தை யும் கொடுப்பதில்லை; மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்

வழங்கிய 'போனஸ்' தொகையையும் கொடுக்கவில்லை. அதிகாரிகளும், மற்ற அரசு ஊழியர்களும், சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் நானும் சென்றுகூட அவர்களை யெல்லாம் அழைத்துப் பேசினோம். முத்தரப்புப் பேச்சு வார்த்தைகூட நடந்தது. ஆர்.டி.ஓ. லெவலிலே பேச்சு வார்த்தை நடத்தினோம். ஆனால், அந்தக் கல்லூரியினுடைய நிர்வாகி, சம்பளம் தரமுடியாது என்று சொல்லிக் கொண்டே இருக்கிறார். அரசாங்கத்தினுடைய பணத்தை வாங்கி வைத்துக் கொண்டு, அந்தப் பணியாளர்களுக்கு மாதந்தோறும் சம்பளம் தரமுடியாது என்று சொல்லிக் கொண்டிருக்கிறார். கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களும், அலுவலர்களும் எவ்வளவு தூரம் எடுத்துக் கூறியும் அவர் சம்பளம் தரமுடியாது என்று சொல்லிக் கொண்டிருக்கிறார். பணியாளர்களும் 4 மாத சம்பளம் கிடைக்காமல் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து அவர் களுக்கு சம்பளம் தர ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்களும், ஆசிரியர் அல்லாதோரும் வேலைநிறுத்தத்திலே ஈடுபட்ட காரணத் தினாலேதான் இந்தப் பிரச்சினை ஏற்பட்டது.

திரு.கே.பி. ராஜூ : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைநிறுத்தம் நாங்கள் பேசி ''வாபஸ்'' வாங் கப்பட்டிருக்கிறது ; இப்போது வேலை நடைபெற்றுக்கொண்டி டிருக்கிறது ; கல்லூரி நடந்துகொண்டிருக்கிறது. மாணவர் களும் பரிட்சை எழுதிக்கொண்டிருக்கிறார்கள். பேச்சுவார்த்தை யின்போதே, ஆசிரியர்களையெல்லாம் அழைத்துப் பேசும்போது நான் எந்த காரணத்தைக் கொண்டும் கல்லூரி மாணவர்க ளுடைய படிப்பு கெடக்கூடாது என்று சொன்னேன். அதை ஆசிரியர்கள் எல்லோரும் ஏற்றுக்கொண்டு, உடனடியாக வேலைக் குத் திரும்பினார்கள். நான் பேச்சுவார்த்தையிலேகூட, நாங்க ளெல்லாம்—ஆர்.டி.ஓ. எல்லாம் பேசும்போதுகூட, அந்த வேலை யிழந்த நாட்களுக்கு வேறு விடுமுறை நாட்களிலே செய்து கொள் வது அல்லது ஈடுகட்டிக்கொள்வது என்று பேசி முடித்தோம். கல்லூரியினுடைய நிர்வாகம் பழி வாங்கக்கூடாது என்றுகூட ஒப்பந்தம் போட்டிருக்கிறோம். ஆகவே, அதையும் மீறி அவர் கள் இன்னும் சம்பளம் தராமல் இருக்கிறார்கள் என்பதை அரசி னுடைய கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்பதற்காக இதை நான் கொண்டு வருகிறேன். ஆகவே, உடனடியாக அவர் களுக்கு 4 மாதச் சம்பளமும், ''போனஸ்'' தொகையையும் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள். வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டிருக்கிற நாட்களுக்கு சம்பளம் கிடையாது என்பது இந்த அரசு பின்பற்றி வருகிற கொள்கையாக, "10 work no p y" என்ற அடிப்படையிலே சம்பளம் தரப்பட மாட்டாது. அவர்கள் வேலைசெய்த நாட்களுக்குத்தான் அவர்கள் சம்பளத்திற்கு உரியவர்கள். அந்தக் கணக்கு இருந்தால், சம்பளத்தைத் தந்திருக்கலாம். ஆனால், கணக்கு நமக்கு வரவில்லை. வராததற்குக் காரணம், அத்தனைப் பேரும் வேலைநிறுத்தத்திலே இருப்பதால், அவர்கள் எந்தவிதமான விவரங்களையும் நம்முடைய கல்லூரி கல்வி இயக்குநரகத்திற்கு அனுப்பவில்லை. ஆகவே, பிரச்சினைக்குக் காரணமே, அவர்கள்தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து கவன ஈர்ப்பு; திரு. ஆர். சிங்காரம், இருக்கையில் இல்லை.

7. தன்னிலை விளக்கம்

(அ) 20—4—1993 ஆம் நாளன்று இந்த அவையில் பேசியது பற்றி வானொலியில் செய்தி ஒலிபரப்பப்பட்டது குறித்து ஓர் உறுப்பினரின் தன்னிலை விளக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1993-94 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைமீது விவாதமும், வாக்கெடுப்பும், 20—4—1993 அன்று மாண்புமிகு. . . . . (குறுக்கீடு).

திரு. மு. தென்னவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மு. தென்னவன்.

*திரு. மு. தென்னவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் காவல்துறை மானியத்தில் நான் உரையாற்றுகிறபோது, இன்றைய தமிழக வரலாற்றில் இடம் பெறக்கூடிய தகுதி, நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு உண்டு என்று சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், ஆத்திரத்தில் அவசரத்தில் இருக்கிற சில காங்கிரஸ் உறுப்பினர்கள் நான் பேசியதைப் புரிந்து கொள்ளாமல், எம்.ஜி.ஆர். வரலாற்றில் இடம் பெறவில்லையா என்று கேட்டார்கள். அதற்கு நான் விளக்கம் தெரிவிக்க விரும்புகிறேன். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் வாழ்ந்த காலத்தில், சரித்திரத்தைப் படைத்துவிட்டார். புரட்சித் தலைவர்